விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்–04.13 p.m.
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் –05.30 p.m.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.I, Mettur**

**Case No : C.C. .350/2023**

**Prosecution witness : ம.சா.1** **Date : 06.08.2024**

| | |
|---|---|
| **Name : மகேந்திரன்** | **Taluk : மேட்டூர்** |
| **Father's Name : ராமசாமி** | **Calling : விவசாயம்** |
| **Village : கொளத்தூர்** | **Age : 55** |

**(Both complainant and accused present.)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

என்னுடைய பிரமாணவாக்குமூலத்தில் உள்ள முழு விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் மற்றும் நிலம் வாங்கி, விற்பது மற்றும் சின்ன சின்ன Contractor வேலை செய்து வருகிறேன். எத்தனை வருடங்களாக ரியல் எஸ்டேட் மற்றும் கான்டிரக்ட் தொழில் செய்து வருகிறேன் என்றால் 10 வருடங்களாக செய்து வருகிறேன். மேற்சொன்ன தொழிலை தவிர வேறு எந்த தொழிலும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10–ம் வகுப்பு வரை படித்துள்ளேன். கான்டிராக்ட் தொழில் என்ன வகையான தொழில் என்றால் சப்கான்டிராக்ட் எடுத்து செய்து வருகிறேன். கான்டிராக்ட் நிறுவனத்தின் பெயர் என்ன என்றால் பெயர் எதுவும் இல்லை. கான்டிராக்ட் தொழிலில் எவ்வளவு தொகை வரை வேலை செய்வீர்கள் என்றால் ரூ.5 லட்சம் வரை செய்வேன். கான்டிராக்ட் தொழிலில் என்னிடம் சுமாராக எத்தனை பேர் வேலை செய்கிறார்கள் என்றால் நான்

வாங்கி வேறு ஒருவரிடம் கைமாற்றி விடுவேன். ஒவ்வொரு கான்டிராக்ட்யும் வேறு ஒருவருக்கு கைமாற்றும் போது எவ்வளவு லாபத்திற்கு கைமாற்றி விடுவேன் என்றால் ரூ.50,000 முதல் ரூ.60000 வரை கொடுப்பேன். கான்டிராக்ட் தொழில் வாங்கி கைமாற்றுவதில் நஷ்டமும் ஏற்படும் என்றால் அதிகபட்சமாக ஏற்படாது. கான்டிராக்ட் தொழிலின் வரவு, செலவுகளை பராமரித்து வருகிறேன் என்றால் இல்லை. தனிப்பட்ட முறையில் சிறு சிறு ஒப்பந்த வேலைகள் நேரடியாக எடுத்து நான் செய்வேனா என்றால் இல்லை. பொதுவாக சப்கான்டிராக்ட் தொழிலில் செய்தால் வரவு, செலவு கணக்குகளை பராமரித்து வரவேண்டும் என்றால் நான் அவ்வாறு செய்யவில்லை. சப்கான்டிராக்ட் தொழிலை வேறு ஒருவரிடமிருந்து நான் எடுக்கும் போது என்னிடம் கான்டிராக்ட்காரர் எவ்வளவு லாபம் வைத்து கொடுப்பார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஒப்பந்த வேலையின் மூலம் எனக்கு ஆண்டு வருமானம் எவ்வளவு வருகிறது என்றால் ரூ.5 லட்சம் வரும். வருடத்திற்கு எத்தனை கான்டிராக்ட் எடுத்து செய்வீர்கள் என்றால் 10 முதல் 12 எடுத்து செய்வேன். ரியல் எஸ்டேட் தொழிலில் நிலம் வாங்கி பிளாட் போட்டு வியாபாரம் செய்வேன் என்றால் இல்லை. நிலத்தை வாங்கி விற்றுவிடுவேன். ரியல் எஸ்டேட் தொழிலில் எனக்கு ஆண்டு எவ்வளவு வருமானம் என்றால் சுமாராக ரூ.1 லட்சம் அல்லது ரூ.2 லட்சம் தான் வரும். விவசாயத்தின் மூலம் எனக்கு ஆண்டு வருமானம் எவ்வளவு வரும் என்றால் சுமார் ரூ.12 லட்சத்திலிருந்து ரூ. 15 லட்சம் வரை வரும். எனக்கு எவ்வளவு விவசாய நிலம் உள்ளது என்றால் 25 ஏக்கர் உள்ளது. மேற்சொன்ன தொழில்கள் செய்வதற்கான ஆவணமோ அல்லது அது மூலம் வரும் வருமானத்தை நிரூபிக்கும்

ஆவணமோ நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் அரசாங்கத்திற்கு வருமான வரி கட்டி வருகிறேன் என்றால் சரிதான். வருமான வரி கணக்கில் எனது மேற்சொன்ன தொழில்களின் மூலம் வரும் வரவு, செலவு கணக்குகள் அனைத்தையும் நான் காண்பித்துள்ளேனா என்றால் இல்லை. நான் மேற்படி சொன்ன தொழில்களின் மூலம் எனக்கு கிடைக்கும் வருமானம் அனைத்தும் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும், அது போல் வருமான ம் எதுவும் வரவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்ன தொழில் செய்கிறார் என்றால் பூதப்பாடியில் ஜெயம் சேகோ பேக்ட்டரி நடத்தி வருகிறார். ரியல் எஸ்டேட் மற்றும் சிவில் கான்டிராக்ட் செய்து வருகிறார். எதிரியின் மாத வருமானம் எவ்வளவு என்று எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி எனக்கு எப்படி பழக்கம் என்றால் உறவினர் என்ற முறையில் பழக்கம். உறவினர்கள் என்பதால் நான் அடிக்கடி அவருடைய வீட்டிற்கு செல்வேன் என்றால் அடிக்கடி செல்லமாட்டேன். ஏதாவது வேலை என்றால் செல்வேன். தேவை என்று எத்தனை முறை எதிரியின் வீட்டிற்கு சென்றுள்ளேன் என்றால் 5, 6 முறை சென்றுள்ளேன். மேற்சொன்ன 5, 6 முறை என்ன காரணத்திற்காக சென்றீர்கள் என்றால் பத்திரிக்கை கொடுப்பதற்காக, இந்த பணம் விசயமாக கேட்பதற்கு சென்றுள்ளேன். எதிரிக்கு கொடுத்த இரண்டு தவணை பணம் எனக்கு எதன் மூலம் வந்த வருமானம் என்றால் விவசாயம் மூலம் வந்த வருமானத்தில் இருந்து கொடுத்தேன். மற்ற வருமானத்திலிருந்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். விவசாயத்தின் மூலம் தான் நான் எதிரிக்கு கொடுத்த பணம் வந்தது என்று எனது பிரமானவாக்குமூலத்திலோ, அல்லது முதல்

விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். நான் உண்மையிலேயே விவசாயத்தின் மூலம் வந்த வருமானத்தில் தான் எதிரிக்கு பணம் கொடுத்திருந்தால் அதை எனது பிரமானவாக்குமூலத்திலும், முதல் விசாரணையிலும் சொல்லியிருப்பேன் என்றும், அது பொய் என்பதால் தான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் செல்போன் நெம்பர் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அது 9443269550 ஆகும். என்னுடைய செல்போன் நெம்பர் 9443892952 ஆகும். எதிரியிடம் நான் செல்போன் மூலம் எத்தனை முறை பேசியுள்ளேன் என்றால் 1, 2 முறை மட்டும் தான் பேசியுள்ளேன். எப்போது பேசினேன் என்றால் நியாபகமில்லை. நான் வீட்டிற்கே 5 தடவை மட்டும் தான் சென்றேன் என்றும், 2 முறை மட்டும் தான் போனில் பேசியுள்ளேன் என்று சொல்வது மூலம் எனக்கும், எதிரிக்கும் எந்தவித கொடுக்கல் வாங்கலும் இல்லை என்பது தெரியவருகிறது என்றால் சரியல்ல. நான் விவசாயம் செய்வதாலும், வேலைக்கு ஆள் சரியாக கிடைப்பதில்லை என்பதாலும் என்னால் அடிக்கடி போனில் பேச முடியவில்லை. விவசாய வேலையில் உள்ள பழு காரணமாக நான் போனில் பேச நேரமில்லை என்று சொல்லும் நிலையில் நான் நேரடியாக எதிரியின் வீட்டிற்கு சென்று பணம் கேட்பதற்கு முகாந்திரம் இல்லை என்று சொன்னால் நான் நேரடியாக தான் போனேன். நான் எதிரியிடம் செல்போனில் பேசியதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் இல்லை. நான் எதிரியிடம் செல்போனில் பேசியதே கிடையாது என்றும், வழக்கிற்காக எதிரியின் செல்போன் நெம்பரை மனப்பாடம் செய்து வந்து கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எதிரியிடம் நேரில் சென்று பேசியதற்கும்,

செல்போனில் பேசியதற்கும் ஏதாவது ஆவணமோ அல்லது சாட்சியங்களோ உள்ளதா என்றால் இல்லை. நான் எதிரியிடம் கடன் கொடுத்த சமயத்தில் ஏதாவது ஆவணங்கள் மற்றும் புரோநோட், தனிப்பட்ட ஆவணங்கள் ஏதாவது எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. நான் இவ்வளவு பெரிய தொகை எதிரிக்கு கொடுப்பதற்கு ஏதாவது மூன்றாவது நபரை சாட்சியாக வைத்தேனா என்றால் இல்லை. நான் எதிரிக்கு கடன் கொடுத்த தொகை ரூ.500 நோட்டுகள். எத்தனை கட்டுகள் என்று எனக்கு நியாபகமில்லை. நான் எதிரிக்கு கடனாக கொடுத்த ரூபாய் நோட்டுக்களை நான் வங்கியிலிருந்து வாங்கி வந்து கொடுத்தேனா என்றால் இல்லை. விவசாயத்தில் நிலக்கடலை மற்றும் வாழை விற்ற வருமானத்தை வைத்து கொடுத்தேன். நிலக்கடலை மற்றும் வாழை விற்றதற்கான ஆவணம் எதுவும் என்னிடம் இல்லை என்றால் இல்லை. எதிரி என்ன தேவைக்காக என்னிடம் கடன் வாங்கினார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். கான்டிராக்ட் தொழிலுக்கு மெட்டீரியல் வாங்குவதற்காக வாங்கினார். நான் கடன் கொடுத்த சமயத்தில் எதிரி எங்கு கான்டிராக்ட் எடுத்து வேலை செய்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் சேலத்தில் செய்தார். ஆனால் குறிப்பிட்டு தெரியாது. பொதுவாக ஒரு பெரிய தொகை கடன் கொடுக்கும் போது கடன் வாங்குபவர் என்ன தொழில் செய்கிறார் என்றும், எதற்காக அந்த கடன் அவர் கேட்கிறார் என்றும் ஆய்வு செய்து தான் கொடுக்க வேண்டும் என்றும், ஆய்வு செய்யாமல் நான் கொடுத்ததாக சொல்லப்படுவது எனக்கும், எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று தெரியவருகிறது என்றால் சரியல்ல. எனக்கும், எதிரிக்கும் ஏற்கனவே பழக்கம் வழக்கம் இருந்ததாலும், ஏற்கனவே கடன்

வாங்கிக்கொடுத்திருப்பதாலும் நான் கடன் கொடுத்தேன். எதிரி எத்தனை வருடமாக கடன் வாங்கினார் என்றால் சுமார் 20 வருடங்களாக என்னிடம் கைமாற்று கடன் வாங்கி, திருப்பி கொடுத்துவிடுவார். மேற்சொன்ன 20 வருடங்களில் எதிரி வாங்கிய கடனில் அதிகபட்ச தொகை எவ்வளவு என்றால் ரூ.20 லட்சம் கைமாற்று கடனாக வாங்கி கொடுத்துள்ளார். மேற்சொன்ன 20 வருடங்களில் எதிரி என்னிடம் சுமார் 100 தடவை பணம் கைமாற்றாக வாங்கி திரும்ப கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்சொன்ன 100 முறை கைமாற்று கடன் கொடுக்கும் போதும், அதில் அதிகபட்ச தொகையான ரூ.20 லட்சம் கடன் கொடுக்கும் போதும், எதிரியிடம் ஏதாவது ஆவணம் வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. இந்த வரவு செலவுகளை வங்கி மூலம் செய்வேனா அல்லது நேரடியாக செய்வேனா என்றால் நேரடியாக தான் செய்வேன். எனக்கு எத்தனை வங்கியில் கணக்கு உள்ளது என்றால் இரண்டு வங்கியில் உள்ளது. எந்த எந்த வங்கி என்றால் கொளத்தூர் இந்தியன் வங்கி, சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, கொளத்தூர் கிளையில் உள்ளது. மேற்படி இரண்டு வங்கி கணக்குகளையும் நான் எத்தனை ஆண்டுகளாக பராமரித்து வருகிறேன் என்றால் 20 ஆண்டுகளாக பராமரித்து வருகிறேன். 20 வருடங்களாக என்னுடைய வங்கி கணக்கில் வரவு செலவு கணக்கு செய்து வருகிறேன் என்றால் சரிதான். நான் எதிரிக்கு கொடுப்பது போலவே வேறு சிலருக்கும் நான் கைமாற்று கடன் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். கைமாற்று கடனாக தான் கொடுப்பேன். வட்டிக்கு கொடுக்கமாட்டேன். எதிரியை தவிர நான் கடன் கொடுத்துள்ள வேறு நபர்களின் பெயர்கள் என்ன என்றால் இளையராஜா கொளத்தூர், நாகராஜ், செல்வராஜ் ஆகியோருக்கு

கொடுத்துள்ளேன். மேற்சொன்னவர்களுக்கு கடன் வங்கி மூலம் கொடுத்துள்ளீர்களா என்றால் இல்லை. ரொக்கமாக தான் கொடுத்துள்ளேன். எதிரிக்கு 100, 200 முறை கைமாற்று கடன் கொடுத்து அதிகபட்சமாக ரூ.20 லட்சம் வரையிலும் மற்ற நபர்களுக்கும் அதிகப்படியான தொகை கைமாற்று கடன் கொடுக்கும் பொழுது மேற்படி பெரிய தொகைகள் எல்லாம் எவ்வாறு வந்தது என்றால் விவசாயத்தின் மூலம் மட்டும் வந்த தொகை தான். ஆனால் மற்ற நபர்களுக்கு எல்லாம் பெரிய தொகைகள் தரமாட்டேன். ரூ.1லட்சம் அல்லது ரூ.2 லட்சம் தருவேன். நான் 20 வருடங்களாக வங்கி கணக்கை பராமரித்து வரும் நிலையில் ஒருவருக்கு ரூ.50 ஆயிரத்திற்கு மேல் கடன் கொடுக்க வேண்டும் என்றால் வங்கி மூலமாக தான் கொடுக்கவேண்டும் என்ற விதிகளை நான் ஏன் பின்பற்றவில்லை என்றால் விவசாயம் வருமானத்திற்கு அவ்வாறு கொடுக்க வேண்டும் என்று இல்லை. விவசாயத்தில் தொடர்ச்சியாக வருமானம் கிடைக்காது என்றும், வறட்சி காலங்களில் நஷ்டம் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரியல்ல. போர் உள்ளது. கிணறு உள்ளது. வறட்சியான காலகட்டங்களில் கிணற்றிலும், போரிலும் தண்ணீர் இல்லாமல் இருக்கும் என்பதால் நஷ்டம் ஏற்படதான் வாய்ப்புள்ளது என்றால் அப்போது தான் எங்களுக்கு லாபம் கிடைக்கும். விளைச்சல் குறைவாக இருக்கும் சமயத்தில் எங்களுக்கு விலை அதிகமாக கிடைக்கும். நான் சொல்வது பொய் என்றும், எல்லாரும் ஆழ்துளை கிணறு வைத்து தான் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றும், எல்லாருக்கும் வறட்சி காலங்களில் நஷ்டம் ஏற்பட தான் வாய்ப்புள்ளது என்றால் சரியல்ல. ஆழ்துளை கிணற்றில் நிறைய பேருக்கு தண்ணீர் இருக்காது. ஆனால் எங்களுக்கு தண்ணீர்

இருக்கும், அது மூலம் விவசாயம் செய்து வருமானம் ஈட்டுவேன். நான் எதிரிக்கு கொடுத்த கடன் எந்த வகையான கடன் என்று எனக்கு தெரியுமா என்றால் கைமாற்று கடன். கைமாற்று கடன் என்றால் காலையில் வாங்கி மாலையில் கொடுப்பது என்றும் அல்லது ஒன்று, இரண்டு நாட்களில் திரும்ப கொடுப்பது தான் கைமாற்று கடன். ஆனால் நீங்கள் சொல்வது போல் 9 மாதம் காலஅவகாசம் வழங்கி கடன் கொடுப்பது கைமாற்று கடனில் வராது என்றால் எதிரி அவ்வப்போது வாங்குவார், திரும்ப கொடுத்துவிடுவார். அவ்வாறு தான் இந்த கடனையும் 9 மாதம் கால அவகாசத்தில் கைமாற்று கடனாக கொடுத்தேன். எதிரி என்னிடம் கடன் வாங்கிய பின்பு நான் எனது அண்ணன் மாதேஷ் என்பவர் இந்த வழக்கு பணம் சம்மந்தமாக ஏதாவது சமாதானம் பேசினாரா என்றால் இல்லை. நான் சொல்வது பொய் என்றும், இந்த வழக்கு கடன் சம்மந்தமாக என் அண்ணன் மாதேஷ் சமாதானம் பேசியதற்கு எதிரியிடம் ஆதரம் உள்ளது என்றால் எனக்கும், அதற்கும் சம்மந்தம் இல்லை. நான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த பிறகு என்னுடைய வருமான வரி (Assessment Year) 2022–2023, 2023–2024 வருடத்திற்கானதை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த 2022–2023 வருட வருமான வரி கணக்கில் அந்த ஆண்டின் மொத்த ஆண்டு வருமானமே ரூ.3,20,450/– என்று காட்டியுள்ளேன் என்றால் சரிதான். அதே போல் 2023–2024 வருட வருமான வரி கணக்கில் அந்த ஆண்டின் மொத்த ஆண்டு வருமானமே ரூ.3,46,760/– என்று காட்டியுள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்ன இரண்டு வருமான வரி கணக்கிலும் என்னுடைய ஒப்பந்த வேலை சம்மந்தமாகவோ, ரியல் எஸ்டேட் தொழில் சம்மந்தமாகவோ, விவசாயம்

இது சம்மந்தமாக எந்தவொரு வரவு செலவு கணக்குகளும் உங்களுடைய வருமான வரி கணக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் என் பெயரில் 5 ஏக்கர் நிலம் மட்டும் தான் உள்ளது. கொளத்தூரில் ஒரு கட்டிடம் உள்ளது. கணக்காளர் என் பெயரில் உள்ளது மட்டும் தான் வருமான வரி கணக்கில் காண்பிக்க முடியும், என் பெற்றோர் பெயரில் உள்ளதை வருமான வரி கணக்கில் காண்பிக்க முடியாது என்று சொன்னார். மற்றவை என் பெற்றோர் பெயரில் தான் நான் விவசாயம் செய்து வருகிறேன்.

**மேலும் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

**ஓம்/—அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**
**மேட்டூர்.**